# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1975/47 - 2016 ජූලි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.07.14

*1975/47 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ.பி. 21/ 1978* (X)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரிஎல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பிவி 62877 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஹொரைசன் கொலிஜ்ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, நிரல் I இல் காணப்படும் "சந்தைப்படுத்தலில் முகாமை இளமாணி திறமை" என்னும் பதிவையும் அதன் அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள அதனது நேரொத்த பதிவையும் உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன்மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 7 ஆந் திகதிய 1944/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன்.*

**நிபந்தனைகள்**

(இதனகத்துப்பின்னர் ''நிறுவகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது,-

(1) கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்பட்ட கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை அல்லது லண்டன் (உயர்தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று சாதாரண சித்திகளை நுழைவுத் தகைமையாகப் பின்பற்றுதல் வேண்டும்.

(2) தகவல் தொழில் நுட்பவியல் விஞ்ஞான இளமாணி மற்றும் தகவல் தொழில்நுட்பவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி தொடர்பில் பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் :-

நிறுவகமானது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு பின்வருவதனை சமர்ப்பிக்க வேண்டும்:-

(அ) இக்கட்டளையின் வெளியீட்டுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இலங்கை, பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சைக்கு சமமாக இருக்கின்ற வெளிநாட்டு பரீட்சைகள் தகைமைகளின் பெறுபேறுகளைத் தெளிவாக குறிப்பிடவும் ;

(ஆ) பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் இயைபான ஆராய்ச்சிப் பட்டப்பின்படிப்பு தகைமைகளைக் கொண்டுள்ள (பீஎச்டி), (எம்பீல்) ஆட்களைக் கொண்டு கல்விசார் பணியாட்தொகுதியினைப் பலப்படுத்தல் ;

(இ) பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் எல்லா செய்முறை அட்டவணைகளையும் எல்லா இயைபான பாடக்கட்டங்களுக்கான ஆய்வு கூடத்தாள்களினையும் பூர்த்தி செய்தல் ;

(ஈ) இக்கட்டளையின் வெளியீட்டுத் திகதியிலிருந்து ஆறு மாதங்களினுள் எதிர்கால தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ஆய்வுகூட வசதிகளை விருத்தி செய்தல்.

**அட்டவணை**

| "நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கெழுத்துக்கள் |
|---|---|
| கல்வி இளமாணி | பிஈடி |
| தகவல் தொழில்நுட்பவியல் விஞ்ஞான இளமாணி/ தகவல் தொழில்நுட்பவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி ஐரீ/பிஎஸ்சி கௌரவ (ஐரீ)" |

லக்ஸ்மன் கிரிஎல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2016, யூலை 13.

7 - 1128

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.